ஓம் சரவணஜோதியே நமோ நம

**புரட்டாசி பௌர்ணமி விழாவிற்கு**

**மகான் ஆறுமுக அரங்கமகானின் ஆசி விளக்க நூல்**

26.09.2026

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அறிவிப்பேன் அரங்கன் யான் அருளாசி
வரமாக பராபவ ஆண்டு புரட்டாசி திங்கள்
பௌர்ணமி பூஜை விழா பலனாகவும்

2. ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும்
அன்னதானத்திற்கும் உயர்வுபட
தொண்டர் பெருமக்கட்கும்
நிர்வாக பாதுகாப்பிற்கும்

3. இனிதே அரங்கன் யான்
அருளாசி தன்னை வரமாக
இன்று அருள்வேன் சிறப்பாக
அரங்கன் யான் இவ்வித

4. நங்கை திங்கள் புரட்டாசி மாத
பௌர்ணமி பூஜை விழாவில்
ஜோதி கலந்து ஆறுமுகப்பெருமான்
துணைபட சிறப்பாக வந்த

5. மக்கட்கெல்லாம் ஆசி தந்து
அனுகூலமும் வரமும் ஞானமும்
அவரவர்க்கு உண்டான
சர்வபலமுமாக வரமாக வழங்கி உள்ளேன்

6. உள்ளபடி இன்று விழா
மிக சிறப்பாகவே நடந்து வர
அன்னதானத்திலும் நீக்கமற
அரங்கன் என்னோடு ஆறுமுகப்பெருமானும்

7. கலந்து அருளமுதாக ஆக்கசக்தி
தந்துள்ள இந்த அருளமுதை
உண்ட மக்களெல்லாம்
பிணி சோடை இல்லாத வண்ணம்

8. பெரும் பாதுகாப்பு கொண்டு இனிதே
ஆரோக்கியம் ஆயுள் பலமோடு வாழ
பரிபூரண ஆசி உண்டு
சிறப்பாக அரங்கன் என்

9. தயவோடு நிர்வகிக்கும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகிகட்கும்
அரங்கன் யான் சர்வ பாதுகாப்பும்
ஞானமும் சகல வகையும்

10. ஆற்றலும் திடமும் மனவளமோடு
சர்வபலமும் தந்து காத்தருள் புரிகின்றேன்
அவர்களோடும் அவரவர் குறித்தும்
என் பாதுகாப்பு பரிபூரணமாய் உண்டு உண்டு

11. சீரும் சிறப்புமாக இந்த அன்னதானத்தின்
தர்மபணிகட்கு உண்டான பொருளாதார பலமும்
மேன்மேலும் வளர்ந்தோங்கவும்
அரங்கன் என் பரிபூரண ஆசி உண்டு

12. மேலும் மேலும் கிராம அன்னதானங்களோடு
இன்னும் பலவாறு தர்மங்கள் வளரவும்
ஒவ்வொரு கிளை சங்கங்களுமே
இன்னும் விரிவடையவும் அதற்கு

13. தேவையான பொருளாதார பலமும்
வசூல் தொகைகளும் பெருகவும்
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
ஓங்காரக்குடிலின் தர்மம் உலகையே மாற்றும்

14. உலகமெங்கும் மாற்றம் நிகழ்த்தும்
வண்ணம் மகா சக்தியாய்
இருக்க இங்கு தர்மம் இன்னும்
வளரவும் உயரவும் உலகமெங்கும்

15. இந்த தர்மம் பரவவும் ஆசியுண்டு
இனிதே அரங்கன் என் புகழ்
நோக்கியும் என் ஆசி வேண்டியும்
மலேசியா புவியிலும் மற்ற தேசங்களிலும்

16. வந்து இந்த பூஜையில்
கலந்து கொண்ட மக்கட்கெல்லாம்
அரங்கன் யான் பரிபூரண
ஆசியும் அனுகூலமும்

17. தருகின்றேன் அவர்கள் வாழ்விலும்
அவர்கள் வேண்டுகின்ற வண்ணம்

வரங்களும் வெற்றி கொள்ள ஆசியுண்டு
அச்சமற உயர்வாக தொண்டாற்றுகின்ற

18. என் சீடர் பெருமக்கள் எக்காலமும்
ஆரோக்கியமோடு அரங்கன் என்
அனுகூலத்தோடும் புண்ணிய பலத்தோடும்
ஞானபலத்தோடும் தேக மனபலம் கூடி

19. ஆயுள் ஆரோக்கியத்தோடு வாழ
பரிபூரண ஆசியுண்டு
கடை தொண்டர் வரை
அனைவருமே அரங்கனுக்கு

20. ஆக்கமுடன் உண்மை விசுவாசம்பட
இருந்து இயங்குவதாலே அவர்களெல்லாம்
அரங்கன் யான் தேற்றுகின்ற
வருங்காலங்களில் ஞானிகளாக

21. புண்ணியவான்களாக சிறக்க
பரிபூரண ஆசி உண்டு
எவ்வித சோர்வும் இன்றி
தொண்டாற்றும் என் தொண்டர்

22. பெருமக்களெல்லாம் வருங்காலங்களிலும்
ஆக்கமோடும் சுறுசுறுப்போடும்
வரும் அன்பர்களை மகிழ்வுற
வரவேற்று உபசரித்து இனிதே

23. ஓங்காரக்குடிலுக்கு புகழ் சேர்க்கும் வண்ணம்
அவர்கள் சேவையும் சிறக்க
பரிபூரண ஆசி உண்டு
ஆக்கமுடன் நிர்வாகம் தொண்டர்கள்

24. வெளியிலிருந்து வரக் கூடிய
அன்பர்கள் பொருளாதார
பலமாக ஓங்காரக்குடிலின்
அன்னதானத்திற்கு வெளியிலிருந்து

25. உதவி செய்பவர்களென அனைவர்களுமே
அரங்கன் என் பிள்ளைகளாகும் இவர்களெல்லோரும்
ஓங்காரக்குடில் தொடர்பில் என்றென்றும்
மகிழ்வோடும் எவ்வித வகையான

26. வெறுப்போ கசப்போ வாரா வண்ணம்
விருப்பமோடு நடந்து கொள்ள
அதற்கு அரங்கன் யான் அருள்புரிவேன்
இன்னவர்கள் தொண்டு சிறக்கவும்

27. இந்த சேவை எக்காலமும்
உலகையே மாற்றும் வண்ணம்
நிலை உயர்ந்து நிற்கவும்
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு

28. இந்தவித நன்னாளில் அரங்கன்
என்னோடு ஞானியர் படைகளும்
கலந்து சரவணஜோதி வழி
ஆசி தந்துள்ளனர்

29. உள்ளபடி இவ்விழா மிகச்சிறப்பாக
நடந்தேறி வருகின்றது
இவ்விழாவில் அன்பர்களோடு அன்பர்களாய்
ஞானிகளும் வந்து கலந்து

30. நிர்வாகிகட்கும் தொண்டர்கட்கும்
உலக அன்பர்கட்கும்
ஆசி தந்து சென்றுள்ளனர்
உள்ளபடி தொடர்ந்து விழா சிறக்கவும்

31. ஓங்காரக்குடிலின் செயல்பாடுகள்
நாளுக்கு நாள் இன்னும் விரிவடையவும்
தொண்டர் பெருமக்கள்
உண்மை விசுவாசமோடு

32. வந்து இணையவும் புது தொண்டர்கள்
சேர்வதற்கும் அரங்கன் என்
பரிபூரண ஆசி உண்டு
ஆசி விளக்கம் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி